# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## காலவிதிப்பு (திருத்தம்)

***(68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2024, சனவரி மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, நவெம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***227 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன் பற்றிய கூற்று***

***வாசகம் 2 :*** இவ்வாசகம் (68 ஆம் அத்தியாயமான காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஏதேனும் ஆதனத்தின் ஏதேனும் ஈட்டின்மீது ஏதேனும் வருமதியான தொகையினை மீளப்பெறுவதற்கான வழக்கை அல்லது பணக்கொடுப்பனவிற்கான ஏதேனும் முறியை கடன்பட்டோருக்கு வழங்கிய அறிவித்தல் திகதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்குப்பின்னர் விதித்துரைக்கப்படுதல் வேண்டும் என்றவகையில் ஏற்பாடுசெய்வதற்கானதாகும்.

*ச.வ.ஒ. 63/2017*

## *(68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச்சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

**1.** (1) இச்சட்டம் 2024 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க, காலவிதிப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தில் எத்தேதியன்று சட்டமூலம் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** (68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, "அத்தகைய காலம் முடிவுறுவதிலிருந்து பத்து ஆண்டுகளினுள்" என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவுவரை உள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "கடன்பட்டோருக்கு அறிவித்தல் வழங்கிய தேதியிலிருந்து பத்து ஆண்டுகளினுள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *68 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.